அறிந்தேற்பு : 341/1980

தோற்றம் : 1971

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

**(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt. 22-03-1980)**

**TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION**

TNGCTA

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. **Ph : 28516573, Telefax : 28414354**

**முனைவர் த. வீரமணி** தலைவர் | **முனைவர் இரா. தாமோதரன்** பொதுச்செயலர் | **முனைவர். ஆ. கோபாலகிருஷ்ணன்** பொருளர்

**முனைவர் க. இரமேஷ்** துணைத்தலைவர் (பொது) | **பேரா சோ. சுரேஷ்** இணைச்செயலர் (பொது)

**முனைவர் உ. சிவப்பிரியா** துணைத்தலைவர் (மகளிர்) | **பேரா. த. மதுரம்** இணைச்செயலர் (மகளிர்)

சுற்றறிக்கை எண். 03/2018 நாள் : 30.09.2018

**அன்பிற்கினிய தோழர்களே! தோழியரே! வணக்கம்**

நமது கழகத்தின் உயர்மட்டக்குழுக் கூட்டம் நேற்று 29.09.2018 காலை 10.30 மணியளவில் கோவை அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்களையும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் இச்சுற்றறிக்கையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஜாக்டோ ஜியோ போராட்டங்கள்:**

ஜாக்டோ ஜியோ போராட்டங்களில் புதிய பென்ஷன் திட்டத்தைக் கைவிட்டு பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்கிற வாழ்வாதாரக் கோரிக்கையையும் 21 மாத நிலுவைத்தொகையை வழங்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகள் ஆகும். எனவே, எதிர்வரும் 04.10.2018 அன்று நடைபெறும் ஒட்டுமொத்தத் தற்செயல் விடுப்புப் போராட்டத்தில் நமது உறுப்பினர்கள் நூறு சதவிகிதம் பங்கெடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழக அரசின் தலைமைச்செயலர் விடுப்பு அனுமதிக்கப்படமாட்டாது என அரசாணை வெளியிட்டுள்ளதால் விடுப்பு இல்லையென்றாலும் விண்ணப்பிக்கலாம். அரசாணைப்படி சம்பள இழப்பு தவிர வேறு எந்த பாதிப்பும் உறுப்பினர்களுக்கு ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இதில் பங்கேற்காத உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் மீது இயக்க ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனக் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதேபோல் 13.10.2018 அன்று சேலம், மெய்யனூர், திருவாக்கவுண்டனூர் பைபாஸ் அருகில் (ஜவகர் மில் எதிரில்) சூரமங்கலம் மெயின் ரோடு வரலட்சுமி திருமண மஹாலில் நடைபெறும் வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டில் அனைத்துப் பொறுப்பாளர்களும் கலந்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கழகத்தின் 19வது மாநில மாநாடு**

நமது கழகத்தின் 19வது மாநில மாநாடு எதிர் வரும் 2019 சனவரி 05 மற்றும் 06 தேதிகளில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநாட்டு அமைப்பாளர்கள் பின் வருமாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் | : முனைவர் த. வீரமணி, மாநிலத் தலைவர் |
| மாநாட்டுச் செயலாளர் | : முனைவர் ப. ரமேஷ், கோவை மண்டலச்செயலர் |
| மாநாட்டுப் பொருளாளர் | : முனைவர் லூ. ராபர்ட், கோவை கிளைத்தலைவர் |

மாநாட்டுக்கான பிற குழுக்களை இந்த அமைப்பாளர்கள் மற்றும் கோவை மண்டலப் பொறுப்பாளர்கள் அமைத்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**கழக நிதிகள்:**

அய்பெக்டோ மாநாடு நவம்பர் 23,24 மற்றும் 25 ஆகிய நாட்களில் நடைபெறுவதாலும், நமது கழக மாநில மாநாட்டுச் செயற்குழுவில் தேர்தல் அறிவிப்பு வெளியிட வேண்டுமென்பதாலும், கழகத்துக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிதிகளையும் எதிர்வரும் அக்டோபர் 30-ஆம் தேதிக்குள் உரிய கணக்குகளில் செலுத்தி உரிய செலுத்துச் சீட்டுகள் மூலம் இரசீதுகளைப் பெற்றுக்கொள்ள கிளைச்செயலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அய்பெக்டோ மாநாடு மற்றும் நமது கழக மாநில மாநாட்டுக்கான உறுப்பினர் நிதி ரூ. 1000/ஐ ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் வசூல் செய்து கீழ்காணும் மாநாட்டு வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டும்.

கணக்கு எண் / பெயர் : 19730110041888/TNGCTA State Conference
வங்கி கிளை : UCO BANK, COIMGATOTE
IFSC Code : UCBA0001973

வங்கிக் கணக்கில் செலுத்தியதற்கு பின், செலுத்து சீட்டு நகலை மாநாட்டுப் பொருளரின் கைபேசி எண்ணிற்கு (9488404800) புலனத்தின் வழி அனுப்பி வைத்தால் உரிய ரசீது உடன் அனுப்பி வைக்கப்படும்.

ஆறு ஆண்டுக்குப் பின் நடத்தப்படும் இந்த மாநில மாநாட்டில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் மாநில ஆட்சிக்குழுவின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுக்கான மாநில சந்தாவை (200+400600) உறுப்பினரிடமிருந்தும் வசூல் செய்து கீழ்காணும் வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டும்.

கணக்கு எண் : 10232923497
வங்கி கிளை : SBI, TRIPLICANE (CHENNAI)
IFSC Code : SBIN0000249

குடும்ப நல நிதிக்கான வைப்புத்தொகை ரூபாய் ஆயிரம் ஆண்டு நிதி ரூபாய் நூறு அக்கூடுதல் ரூ.1100/ உறுப்பினரிடமிருந்தும் வசூல் செய்து கீழ்காணும் வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டும்.

கணக்கு எண் : 10232923689
வங்கி கிளை : SBI, TRIPLICANE (CHENNAI)
IFSC Code : SBIN0000249

இவ்விரு தொகைகளையும் வங்கி கணக்கில் செலுத்தியதற்கு பின், செலுத்து சீட்டு நகலை, tngctasubscriptions@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வைத்தால் உரிய ரசீது உடன் அனுப்பி வைக்கப்படும்.

**நிலுவையிலுள்ள கோரிக்கைகள்:**

இந்தியாவில் நான்காவது மாநிலமாக நமது தமிழகத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கு யூஜிசி ன் ஏழாவது ஊதியக்குழுப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதற்கு தமிழக அரசுக்கு நன்றிதெரிவிக்கும் நிலையில், நிலுவையிலுள்ள கோரிக்கைகளுக்காக நாம் குரல் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்நிலையில்,

- கிராமப்புற கல்லூரிகளின் ஆசிரியர் பற்றாக்குறையை போக்க விரைவில் ஆசிரியர் நியமனம் வேண்டும்.
- தரஊதியம் 7000 – 8000 பெறுவதற்கான அரசாணை 102 இல் திருத்தம் வேண்டும்
- 01.01.2016 முதல் M.Phil., Ph.D., முடித்தவர்களுக்கு யூஜிசி நெறிமுறைகள் 2018 -இல் அனுமதிக்கப்பட்டுள்ள ஊக்க ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.
- தரஊதியம் 6000 – 7000 வழங்கியதில் உள்ள நிலுவைத்தொகை வழங்க வேண்டும்.
- 2015 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முழுத்தகுதிச்சான்று, பணிவரன்முறை ஆணை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்க வேண்டும்.
- கல்லூரிகளில் பேராசிரியர் பணிமேம்பாடு காலமுறைப்படி வழங்க வேண்டும்.
- உறுப்புக்கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்றி அரசாணை வெளியிடவேண்டும்.
- அரசு கல்லூரிகளின் பாதுகாப்புக்கென அறிவிக்கப்பட்ட சுற்றுசுவர் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீட்டு ஆணை வழங்க வேண்டும்.
- கழகப் பொறுப்பாளர்கள் மீது விசாரணையின்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை கைவிடவேண்டும்

ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 03.10.2018 அன்று நமது மாநிலத் தலைமை, கல்லூரிக்கல்வி இயக்குநர், உயர்கல்வித்துறைச்செயலர் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆகியோருக்குக் கடிதம் கொடுப்பது எனவும், இதே கோரிக்கைகளை வலியுறுத்தி அக்டோபர் 8-ஆம் தேதி கிளைகளில் கடித இயக்கம் நடத்தி கல்லூரிக்கல்வி இயக்குநர், உயர்கல்வித்துறைச் செயலர் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பது எனவும், 14.10.2018 அன்று அனைத்து மண்டலங்களிலும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், எதிர்வரும் 21.10.2018 அன்று மாநில செயற்குழுக் கூட்டம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாவிட்டால், 29.10.2018 அன்று அனைத்து கிளைகளிலும் உள்ளிருப்புப் போராட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**இரா. தாமோதரன்**
பொதுச் செயலர், TNGCTA